

திருச்செந்தூர் வட்டம் காயாமொழி மத்திமான்விளை ஊரில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பரிசு வழங்கினார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், செந்தில் சேகர், தளபதி எடிஷன் மற்றும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### கழக ஆட்சியில் – காரைக்குடி புலவர் ஆ.பழநியின் நூல்களை நாட்டுடைமையாக்கிய

# கழகத்தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு-இன்றுபாராட்டுவிழா!

### முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – முன்னணியினர் பங்கேற்பு!

காரைக்குடி, ஜூலை 18-

கடந்த ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில், ஏப்.29 இல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை யொட்டி, தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் "தமிழ் வளர்ச்சி நாள்" விழா தமிழகம் முழுவதும் ஒருவாரம் நடந்தது.

இந்த விழாவில் இறுதி நாளான 2025 மே -05ம் நாள் சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்ட நிகழ்வில் "திராவிட மாடல்" முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று, காரைக்குடி "பகுத்தறிவுப் பாவலர்" ஆ.பழநி எழுதிய படைப்பிலக்கிய 18நூல்களையும் நாட்டுடைமை செய்து அரசாணையும், பரிவுத் தொகை காசோலையும் வழங்கினார்கள். இதனை புலவரின் மரபுரிமை வாரிசுகளான சுப.அழகுப் பாண்டியனும் அவரது பேரன்களும் பெற்றுக் கொண்டனர். அத்தொகையினை வங்கியில் முதலீடு செய்து "புலவர் ஆ.பழனி அறக்கட்டளை"யும் தொடங்கி பதிவு செய்தனர்.

**நன்றி - பாராட்டு விழா!**

புலவரின் நூல்களை நாட்டுடைமையாக்கிய "திராவிட மாடல்" முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கும் விழா, இன்று (சூலை 18 சனிக்கிழமை) மாலை காரைக்குடியில் செக்காலை பேக்கரி - போலீஸ் காலனி அருகில் உள்ள கிருஷ்ணா கார்டன் அரங்கில் நடக்கின்றது.

அறக்கட்டளையின் தலைவர் சுப.அழகுபாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை வகிக்கிறார்.

துணை மேயர் நா. குணசேகரன், தொழிலதிபர்கள் சா.நடராஜன், கா.நாராயணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சாமி திராவிட மணி நோக்கவுரையாற்றுகிறார்.

வா.கிருட்டின பிரசாத் நன்றியுரையாற்றுகிறார்.

தி. என்னாரெசு பிராட்லா இணைப்புரை வழங்குகிறார்.

இதில் மாவட்ட தி.மு.க. செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகி கவிச்சுடர் கவிதைப்பித்தன், தி.க.து. பொதுச் செயலர் பிரின்சு என்னாரெசு பெரியார், முனைவர் மா.சுப.சரளா உட்பட பலரும் கலந்து கொள்கிறார்கள்.

# தேர்தல் வாக்குறுதி vs த.வெ.க.வின் பாசிஸ்ட் ஆட்சி!

### தி.மு.க. ஐ.டி.விங் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை.18-

த.வெ.க.வின் தேர்தல் வாக்குறுதி vs த.வெ.க.வின் பாசிஸ்ட் ஆட்சி என்று தி.மு.க. ஐ.டி. விங் ட்விட்டர் பதிவில் விமர்சித்துள்ளது.

இது குறித்து தி.மு.க. ஐ.டி. விங் பதிவு வருமாறு:-

உங்கள் தேர்தல் அறிக்கையின் 89வது பக்கத்தில்,



இன்பம் 10 வெற்றித் தமிழ்நாடு

3 காவல் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி

ஒரு மாநிலத்தில் நடக்கும் ஒவ்வொரு காவல் படுகொலையும் அந்த மாநிலத்தை நிர்வகிக்கும் அரசின் தோல்வியைக் காட்டுகிறது. நமது த.வெ.க. ஆட்சியில் – திமுக ஆட்சியில் நடத்தப்பட்ட காவல் மரணங்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நீதியைப் பெற்றுத் தர – சுதந்திர விசாரணை மேற்கொள்ளப்படும். இத்தகைய கொடும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் அனைவர் மீதும் எந்தவித பாரபட்சமும் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

4 நீதித்துறை உட்கட்டமைப்பு மேம்பாடு & வழக்குகள் நிலுவை குறைப்பு

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கும், பொதுமக்களுக்கு நீதியை எளிதாக அணுகக்கூடியதாக மாற்றுவதற்கும், புதிய உள்ளூர் நீதிமன்றங்கள் நிறுவப்படும்.

5 சட்டவிரோத மதுபான விற்பனைக்கு பூஜ்ய சகிப்புத்தன்மை

போலி, சட்டவிரோத மற்றும் கருப்புச் சந்தை மதுபானங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை முழுமையாக ஒழிக்க த.வெ.க. அரசு உறுதிபூண்டுள்ளது. இதனை மிகக் கடுமையான குற்றமாகக் கருதி, சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் துணைபுரிபவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1. "ஒவ்வொரு காவல் படுகொலையும் அரசின் தோல்வி" என நீங்களே எழுதி வைத்துவிட்டு, இன்று உங்கள் ஆட்சியின் கீழ் ஒரே வாரத்தில் மூன்று காவல் மரணங்களை அனுமதித்திருப்பது உங்கள் தோல்வியின் உச்சமல்லவா?

2. அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு 'Party Fund' பெயரில் 30 லட்சம் வரை உங்கள் கட்சியினரே லஞ்சம் வசூலிப்பதுதான் உங்கள் நீதித்துறை மேம்பாடா?

3. நிஜத்தில் பாட்டிலுக்கு 30 ரூபாய் கமிஷன், FL2 பார் உரிமத்திற்கு லட்சக்கணக்கில் Party Fund எனக் கூறி லஞ்சம் என உங்கள் அரசு ஊழலில் ஊறித் திளைக்கிறது!

ஆட்சி நிர்வாகத்தில் ABCD கூடத் தெரியாத 'பொம்மை' முதல்வராகவும், கட்சியினரை கட்டுக்குள் வைக்கத் தெரியாத 'டம்மி'யாகவும் நீங்கள் இருப்பதால், மாநிலமே முடங்கி நிற்கிறது - என்று தி.மு.க. ஐ.டி.விங் ட்விட்டரில் பதிந்துள்ளது.

### நாகர்கோவிலில் சிறையில் அடித்துக் கொலை!

# விசாரணைக் கைதியின் உடலை வாங்க மறுத்து 4ஆவது நாளாகப் போராட்டம்!

நாகர்கோவில், ஜூலை 18-

நாகர்கோவில் சிறையில் சக கைதிகள் மற்றும் சிறை காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்த விசாரணைக் கைதியின் உடலை வாங்க மறுத்து அவரது உறவினர்கள் 4ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகர்கோவில் சிறையில் சக கைதிகள் மற்றும் சிறை காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்த விசாரணைக் கைதியின் உடலை வாங்க மறுத்து அவரது உறவினர்கள் 4ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம், வடக்குதாமரைகுளம் அருகேயுள்ள ஈத்தங்காட்டைச் சேர்ந்தவர் சபரிவர்மன் (33). மாற்றுத்திறனாளியான இவர் தனது வீட்டின் அருகிலேயே பெட்டிக் கடை நடத்தி வந்தார். இவரது கடையில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள்விற்றதற்காக தென்தாமரைகுளம் போலீஸாரால் கடந்த 9ஆம் தேதி கைது செய்யப்பட்டு நாகர்கோவில் கிளை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், கடந்த 13 ஆம் தேதி அவர் உயிரிழந்துவிட்டதாக, சபரிவர்மனின் குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சபரிவர்மனை போலீஸார் அடித்து கொலை செய்துவிட்டதாகக் கூறி அவரது குடும்பத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இரா.ஸ்டாலின் நேரடி விசாரணை மேற்கொண்டார். நாகர்கோவில் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி சத்தியமூர்த்தியும் விசாரணை நடத்தினார். இதில் சபரிவர்மன் சிறைக்குள் தாக்கப்பட்டதில் உயிரிழந்தது தெரியவந்தது.

சிறைக் காவலர்கள் கைது: மேலும் விசாரணையில், சபரிவர்மனை சக கைதிகள் மற்றும் சிறை காவலர்கள் சேர்ந்து, அவரது கை, கால்களை கட்டி வைத்து தாக்கியது தெரியவந்தது.

இதுதொடர்பாக நாகர்கோவில் சிறை தலைமை வார்டர் திருமலைநம்பி, வார்டர்கள் சிவகுமார், ஜெகன் ஆகிய 3 பேரை நேசமணிநகர் போலீஸார் கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணை அடிப்படையில், சக கைதிகள் விஷ்ணு, சாரதி, ஜெகன், சரத், பெருமாள், சேதுராம், அஜித், அரவிந்த் ஆகிய 8 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கொலை உள்ளிட்ட 8 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**உடலை வாங்க மறுப்பு:** இருப்பினும் முறையாக நிவாரணம், குடும்பத்தினருக்கு அரசு வேலை அறிவிப்பை அரசு வெளியிட்டால் மட்டுமே சபரிவர்மனின் உடலை பெற்றுக் கொள்வோம் என்று கூறி 4 ஆவது நாளாக அவரது குடும்பத்தினர் வியாழக்கிழமையும் போராட்டத்தை தொடர்ந்தனர்.




இராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கணிப்பாய்வு கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு மக்களின் பிரதான அடிப்படை தேவைகள் பல்வேறு மக்கள் பணிகளின் நிலைகள் குறித்து பல்வேறு அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும். இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் வழங்கினார். இந்நிகழ்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கதிரவன், மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகுரு பிரபாகரன் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் அனைத்து அரசு துறை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### விசாரணை என்ற பெயரில்

# காவல் நிலையத்தில் அடைத்து வைத்து பத்திரிகையாளர் விஜயனிடம் அராஜகம்!

### த.வெ.க. அரசின் செயலுக்கு – கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜூலை 18-

பத்திரிகையாளர் விஜயன் அவர்களை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருக்கும் த.வெ.க. அரசின் காவல் துறையின் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் உடனே அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு வருமாறு:

பத்திரிகையாளர் விஜயன் அவர்களை விசாரணை என்னும் பெயரில் அராஜகமான முறையில், அவரது தொலைப்பேசியைப் பறிமுதல் செய்து காவல்நிலையத்தில் அடைத்து வைத்திருக்கும் தவெக அரசின் காவல்துறையின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஜனநாயக அடிப்படையில் விமர்சிக்கும் மாற்றுக் கட்சியினரைப் பழிவாங்கும் கீழ்மையான அரசியலை, தற்போது பத்திரிகையாளர்கள் மீதும் செய்யத் தொடங்கிவிட்டது தவெக அரசு.

உடனடியாக பத்திரிகையாளர் விஜயன் அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தனது ட்விட்டர் பதில் குறிப்பிட்டுள்ளார்.

### மோடி அரசால் நிகழ்ந்த விபரீதம் – இஸ்ரோவின் பெரும் தோல்விகள்!

# 'ககன்யான்' திட்டத்துடன் தொடர்புடைய 100 இஸ்ரோ விஞ்ஞானிகள் திடீர் விலகல்!

### ஒன்றிய அரசு கடும் அதிர்ச்சி - பணி விலகும் விதிகளைக் கடுமையாக்கி உத்தரவு!

புதுடெல்லி, ஜூலை 18-

இந்தியாவின் விண்வெளி நிறுவனத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வெளியேறி வருவதை தொடர்ந்து பணியில் இருந்து விலகும் விதிகளை அரசு கடுமையாக்கி உத்தரவிட்டுள்ளது. இஸ்ரோவின் ஏ பிரிவு அறிவியல்/தொழில்நுட்ப அதிகாரிகளிடம் இருந்து தாமாக முன்வந்து விருப்ப ஓய்வு மற்றும் , பதவி விலகி வருவதாக கூறப்படு கின்றது. இதுவரை 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பதவி விலகி இருப்பது ஒன்றிய அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமாக்கள் தொடர்பான விதிகளை கடுமையாக்கி இஸ்ரோவின் முக்கிய விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்கு விண்வெளித் துறை ஒரு புதிய உத்தரவை பிறப்பி த்துள்ளது. இந்த அதிகாரப்பூர்வ உத்தரவில், 'இஸ்ரோவில் சமீபகாலமாக, மதிப்புமிக்க ககன்யான் மற்றும் பிற முக்கிய திட்டங்களுடன் தொடர்புடையவர்கள் உட்பட, இஸ்ரோவின் 'குரூப் ஏ' அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களிடமிருந்து விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமா கோரிக்கைகள் பெருமளவில் வருவதாகவும், இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கவனிக்கப்பட்டுள்ளது.

**பாதிக்கப்படும் திட்டங்கள்**

இஸ்ரோவில் மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் ககன்யான் திட்டம், நிலவிலிருந்து மாதிரிகளை எடுத்து வரும் திட்டமான சந்திரயான்4; இந்தியாவின் விண்வெளி நிலையமாக அமையவுள்ள பாரதிய விண்வெளி நிலையம், செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் திட்டமான மங்கள்யான்2 திட்டப்பணிகள் அப்படியே முடங்கி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

**மோடி அரசால் நடந்த விபரீதம்**

இந்தியாவை பொறுத்தவரை விண்வெளித்துறையில் இஸ்ரோ மட்டுமே கோலோச்சியது. ஆனால் 2020ல் தனியார் நிறுவனங்களுக்கு விண்வெளித் துறையை மோடி அரசு திறந்து விட்டது.

2023ல் இந்திய விண்வெளி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதும் நாடு முழுவதும் தனியார் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அவை இஸ்ரோவில் இருக்கும் மூத்த விஞ்ஞானிகளை குறிவைத்து அதிக சம்பளம் கொடுத்து வேலைக்கு எடுத்தன.

இந்தியாவில் தற்போது 400க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன; இவை ரூ. 50 ஆயிரம் கோடிமதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளன. இதில் 2025ம் ஆண்டில் மட்டும் சுமார் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது.

பிக்சல், துருவா ஸ்பேஸ், ஸ்கைரூட் ஏரோ ஸ்பேஸ், அக்னிகுல் காஸ்மாஸ், பெலாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ் போன்ற தனியார் நிறு வனங்கள் இத்துறையில் முன்னணியில் உள்ளன.

இஸ்ரோவில் இருந்து சமீபத்தில் 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் விலகி உள்ளனர். இதில் பெங்களூருவில் உள்ள யுஆர் ராவ் செயற்கைகோள் மையம் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள மையங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் வெளியேறியுள்ளனர்.

விலகிய விஞ்ஞானிகளில் சிலர் விண்வெளித் துறை சார்ந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களில் இணைந்துள்ளனர்.

விலகியவர்களில் மூத்த விஞ்ஞானி விக்டர் ஜோசப் டி என்பவரும் ஒருவர். இவர் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் 'ஜியோ சின்க்ரோனஸ் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள் எம்கே III (ஜிஎஸ்எல்வி எம்கே III) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்தார். 'ககன்யான்' விண்வெளிப் பயணத் திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள ஏவு வாகனமான எல்விஎம் 3ன் திட்டத் தலைவராக சுமார் 13 மாதங்கள் பணியாற்றிய பிறகு, விக்டர் ஜோசப் பிப்ரவரி மாதத்தில் பணியிலிருந்து விலகியதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர் எஸ். சோமநாத், சென்னையைச் சேர்ந்த விண்வெளித் துறை ஸ்டார்ட்அப் நிறுவனமான 'அக்னிகுல் காஸ்மோஸ்' இயக்குநர்கள் குழுவில் பார்வையாளராக இணைந்துள்ளார். 2025 ஜனவரி வரை இஸ்ரோ தலைவராகப் பணியாற்றிய அவர், நிலவின் தென் துருவத்திற்கு அருகில் சந்திரயான்3 வெற்றிகரமாகத் தரையிறங்கியது மற்றும் இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலமான ஆதித்யாஎல்1 ஏவப்பட்டது உள்ளிட்ட பல முக்கியத் திட்டங்களை வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இஸ்ரோ எதிர்கொண்ட பெரும் தோல்விகள்!**

இஸ்ரோவில் இருந்து மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் இஸ்ரோவின் விண்வெளி திட்டங்கள் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்துள்ளன. அதன் விவரம்:

இஸ்ரோவின் நம்பகமான 'போலார் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள்' (பிஎஸ்எல்வி) ஏவு வாகனம், ஓராண்டுக்குள் இரண்டு தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்தது.

ஜனவரி மாதத்தில், இஓஎஸ் என்1(EOSN1) புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் பல வணிகரீதியான செயற்கைக்கோள்களைச் சுமந்து சென்ற பிஎஸ்எல்விசி62 ஏவு வாகனம், அதன் மூன்றாம் கட்டத்தின் இறுதியில் ஏற்பட்ட பிரச்னைகள் காரணமாகத் திட்டமிடப்பட்ட பாதையிலிருந்து விலகிச் சென்றது.

கடந்த ஆண்டு மே மாதம், பிஎஸ்எல்வி சி61/EOS09 (ரிசாட்1பி) ஏவு வாகனம் 529 கி.மீ உயரத்திலுள்ள சூரியஒத்திசைவு சுற்றுப்பாதையை அடையத் தவறியது. மூன்றாம் கட்டத்தின் செயல்பாட்டில் ஏற்பட்ட குறைபாட்டினால், சுமார் 203 வினாடிகளுக்குப் பிறகு எரிபொருள் அறையின் அழுத்தம் (திடீரெனக் குறைந்ததால், அப்பயணம் நிறுத்தப்பட்டு அந்த ரேடார் செயற்கைக்கோள் அழிந்தது.

இஸ்ரோ விஞ்ஞானிகள் பதவி விலகுவது குறித்த கேள்விக்கு ஒன்றிய தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில்,' இஸ்ரோவில் மிகப் பெரிய பணியாளர் படை உள்ளது. சிலர் வெளியேறும்போது பலரும் புதிதாக இணைகிறார்கள். பலர் சென்றுள்ளனர், பலர் வந்துள்ளனர். இதில் எந்த சர்ச்சையும் இல்லை' என்றார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 44 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 44வது வட்ட கழக செயலாளர் துரைசாமி தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் த.ஜீவா முன்னிலையில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், முருகன், செல்வன், பெருமாள், கிருஷ்ணன், முருகேசன், கண்ணன், ரெஞ்சித் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.